# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar)
Preliminary Register) CC.38/2021
Sessions)

(Prosecution P.W.10
Deposition of witness for (Defence

| Name | சிவலிங்கசேகர் | -- | |
|---|---|---|---|
| Father's Name | மாயாண்டி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | மதுரை | Age | 63 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 29th Day of June 2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் காவல்துறையில் காவல் துணைக்கண்காணிப்பாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று விட்டேன். இதற்கு முன்பு கடந்த 28.11.2020 அன்று கிருஷ்ணன்கோவில் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது மல்லி காவல் நிலைய குற்ற எண்.248/2020 சட்டப்பிரிவுகள் 279, 304 இ.த.ச ன் படியான வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்று மதியம் 01.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாரீஸ்வரன் மற்றும் பாஸ்கரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6. பின்னர்** 29.11.2020 ம் தேதி காலை 07.00 மணிக்கு விருதுநகர் மாவட்ட மருத்துவகல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து இறந்துபோன சந்திரசேகர் பிரேதத்தின்மீது பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து 08.30 மணிக்கு பிரேத விசாரணை முடித்து இறப்பிற்கான மருத்துவக் காரணம் வேண்டி காவலர் திரு. வினோத்கண்ணன் என்பவர் மூலமாக பிணக்கூறாய்வு செய்து சான்று வழங்க வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7.** சாட்சிகள் பாண்டியன், நாகராஜன், மகேஸ்வரி, ராஜ்குமார், மாரீஸ்வரன், பாஸ்கரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 18.12.2020 ம் தேதி வழக்கில் விபத்தை ஏற்படுத்திய சுப்புராஜ் என்பவர் காலை 10.00 மணிக்கு நிலையம் ஆ ஜரானவரை கைது செய்து தக்க பதிவேடுகள் பதிவு செய்து தக்க பிணையில் விடுவித்தேன். அன்றே விபத்தை ஏற்படுத்திய TN95 B7351 என்ற இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 30.12.2020 ம் தேதி வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் ஜாஸ்மின் மெர்ஸி கமலா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ஆய்வறிக்கை பெற்றேன். இறந்துபோனவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்த சிவகாசி அரசு மருத்துவமனை மருத்துவர் தீபன் ராம்குமார் என்பவரையும் விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவர் திருமதி. பிரியங்கா என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிணக்கூறாய்வு செய்த மருத்துவர் பிரபு பிரசன்னா எனபவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்து பிணக்கூறாய்வு அறிக்கை பெற்று வந்தேன். **பிணக்கூறாய்வு அறிக்கை அ.சா.ஆ.8.** காவலர் வினோத்கண்ணன் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு

ஆயவாளர் திரு.மருதுபாண்டி ஆகியோரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் எனது விசாரணையை முடித்து எதிரியின் மீது 279, 304(A) இ.த.ச.பின் படி குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

எனது விசாரணையில் அ.சா.1 வாய்மொழியாக புகார் கொடுத்ததாகவும் சொல்லச்சொல்ல புகார் எழுதிய காவலர் எழுதிக்கொடுத்ததாகவும் சொன்னால் சரியல்ல. புகாரில் அடித்தல் திருத்தல் உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த அடித்தல் திருத்தலில் நான் எனது அம்மாவை பார்த்துவிட்டு திரும்ப வரும்போது என்று எழுதி பின்னர் பார்க்கசென்றபோது என்று திருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோனவரின் உடன்பிறந்த தம்பிதான் புகார்தாரர் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் அ.சா.1, 2 சம்பவ இடத்தில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், சம்பவ சமயத்தில் யாரும் இல்லாததால் உடன் பிறந்த தம்பியை வரச்சொல்லி சாட்சியாகப் போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வெற்றுக் காகிதத்தில் கையொப்பம் பெற்று புகாரை எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் எமெர்ஜென்சி லைட், டார்ச் லைட் வெளிச்சத்தில் பார்வையிட்டதாக சொல்லியுள்ளதால் அந்த இடத்தில் எரியும் தெரு விளக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. சிவகாசியில் இருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் வரும்போது இடதுபுறமாக வந்து வலதுபுறமாக திரும்ப வேண்டும் என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் எஸ்.புதுப்பட்டிக்கு செல்லும் சாலைக்கு வடக்கு மற்றும் தெற்கே தார்ச்சாலை உள்ளது என்றால் சரிதான. சம்பவ இடத்திற்கு அருகே சாலையின் இருபுறமும் பேரிகார்டுகள் உள்ளது என்றால் அங்கு பேரிகார்டு உள்ளது என்றும் அதனால் வாகனங்கள் அங்கு வேகமாகவும் அஜாக்கிரையாகவும் வரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. எனது விசாரணையில் அ.சா.1., கையால் சைகை காட்டியதாக சொல்லியுள்ளார். இரவு நேரத்தில் சைகை காட்டினால் யாருக்கும் தெரியாது என்றும், அவ்வாறு சைகை காட்டியிருந்தாலும், அ.சா.1 நின்றிருந்த இடத்திலிருந்து அதை பார்க்க வாய்ப்பில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவ இடட்ததில் அ.சா.1, 2 இல்லை என்றும், அவ்வாறு இருந்திருந்தால் காயம் பட்ட நபருடன் மருத்துவமனைக்கு சென்றிருப்பர் என்று சொன்னால் சரியல்ல, உடன் சென்றதாகத்தான் சொல்லியுள்ளனர். அ.சா.3 இறந்துபோன நபரின் உடன்பிறந்த அண்ணன் என்றால் சரிதான். அ.சா.3 சம்பவம் பற்றி அ.சா.4 க்கும் சம்பவம் பற்றி தகவல் சொன்னதாக சொல்லியுள்ளனர் என்றால் சரிதான். அ.சா.4 எனது விசாரணையில் அவரது கணவரை மதுரைக்கு மேல் சிகிச்சைக்கு கொண்டு செல்லும்போது மூச்சுத் திணறல் ஏற்பட்டு இறந்துவிட்டதாகவும், அது சம்பபந்தமாக முதலுதவி சிகிச்சை அளித்த மருத்துவரை நான் விசாரித்தேனா என்றால் நான் விசாரித்ததில் முதலுதவி செய்து மேல் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தாக சொல்லியுள்ளார். இரவு 01.30 மணிக்கு பார்வை மகஜரில் சாட்சிகள் சம்பவ இடத்திற்கு என்ன காரணத்துக்காக வந்தனர் என்று விசாரித்தேனா என்றால் அவர்கள் மீது சந்தேகம் இல்லை என்பதால்

விசாரிக்கவில்லை. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உரிமையாளரை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல். இதுவரை கண்டுபிக்க முடியவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. விபத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றும் அந்த நேரத்தில் எதிரி அங்கு வந்திருந்தால் அவரது உரிமையாளரை கண்டுபிடித்திருக்கலாம் என்றும் எவரோ ஏற்படுத்திய விபத்திற்கு எதிரி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அ.சா.1–6 இறந்து போன நபரின் உறவினர்கள் என்றும், அவர் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றும் சொன்னால் சரிய்ல்ல. முறையாக புலன் விசாரணை செய்திருந்தால் யாரால் விபத்து ஏற்பட்டது என்று தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. எதிரியை விசாரணைக்காக வரச்சொல்லி பொய் வழக்கு தாக்கல் செய்து கைது செய்துள்ளோம் என்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்து காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. முறையாக புலன் விசாரணை செய்திருந்தால் எதிரி குற்றவாளி இல்லை என்று தெரியவந்திருக்கும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

சாட்சியின் கையொப்பம்

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Digitally signed by R V RAJA KUMAR Digitally signed by R V RAJA KUMAR

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**